## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்அறிக்கை
## (28.06.2017முதல் 02.07.2017)

**அறிக்கைஎண் 051/2017** **தேதி :27.06.2017**

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (28.06.2017 முதல் 02. 07. 2017)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கும் வறண்ட வானிலை மற்றும் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°செ முதல் 19°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 முதல் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28.06.17 | 2 | 26 | 18 | 6 | 80 | 55 | 16 | தெற்கு |
| 29.06.17 | 0 | 26 | 18 | 6 | 80 | 55 | 16 | தெற்கு |
| 30.06.17 | 0 | 28 | 19 | 6 | 75 | 50 | 16 | தெற்கு |
| 01.07.17 | 0 | 28 | 19 | 8 | 75 | 50 | 14 | தெற்கு |
| 02.07.17 | 0 | 28 | 19 | 8 | 75 | 50 | 14 | தெற்கு |

### வேளாண் அறிவுரை

- ✓ மணிக்கு 16கி.மீக்கும் மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைகளுக்கு ஊன்று கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.

- ✓ 150 நாட்கள் வயதுடைய கரும்புக்கு தோகை உரிப்பதன் மூலம் முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி 40 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.

- ✓ வறண்ட வானிலை மற்றும் தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் கடந்தவார மழையினை பயன்படுத்தி தென்னைமரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இடவும்.
- ✓ நடப்பு வானிலையில் குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்கவும்.

## குறுஞ்செய்தி


- ✓ நடப்பு வானிலையில் குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்கவும்.



**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**